**<u>செய்தி வெளியீடு எண்.583</u>** **<u>நாள்.18.07.2008</u>**

## செய்திக்குறிப்பு

தமிழ்நாடு மாநில நிலப் பயன்பாட்டு வாரியம், மாநிலத் திட்டக்குழு துணைத்தலைவர் தலைமையில் இயங்கி வருகிறது. நடுவண் அரசு, மாநில நிலப் பயன்பாட்டு வாரியம் நடைமுறைப்படுத்துகிற சில செயல் நடவடிக்கைகளுக்கு நிதி உதவி அளிக்கிறது. குறிப்பாக நிலம், நீர் போன்ற வள ஆதாரங்கள் எவ்வாறு செம்மையாக பயன்படுத்தப் பட வேண்டும் என்பதை விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் தெரிந்து கொள்வதற்கு விழிப்புணர்வு முகாம்களை நடத்தி பல செயல்முறை விளக்கங்களை அளித்து வருகிறது. இயற்கை வளங்களான காடுகளை எவ்வாறு போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்பது பற்றியும், காடுகள் அழியாமல் பாதுகாப்பதற்கு மரங்கள், மூலிகை செடிகள் போன்றவற்றை வளர்ப்பதற்கு ஏதுவாக பல செயல் விளக்க நிகழ்வுகளை அந்தந்த துறையின் முக்கிய அதிகாரிகளைக் கொண்டு நடத்துவதற்கு உதவி அளிக்கிறது. தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்களைத் தொடர்பு கொண்டு பல கருத்தரங்குகள் நடத்தி இவ்வாரியம் விழிப்புணர்வு ஏற்படுத்துகிறது.

மாநில நிலப் பயன்பாட்டு வாரியத்திற்கு உரிய தொகையை நடுவண் அரசு 90 விழுக்காட்டிற்கு மேல் அளிக்கிறது. மாநில அரசு தனது பங்காக 10 விழுக்காடு நிதி அளிக்கிறது. 2006, 2007, ஆகிய இரண்டு ஆண்டுகளில் நடுவண் அரசு வழங்கிய முழுத்தொகையையும் பயன்படுத்தி சுற்றுச் சூழல் பாதுகாப்பு, மண்வள பாதுகாப்பு ஆகியவற்றை பற்றி விழிப்புணர்வு முகாம்கள், பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி ஆகியவற்றை நடத்தியும், பல செயல் நிகழ்வுகளை இவ்வாரியம் விரைந்து நிறைவேற்றியுள்ளது.

நடுவண் அரசு மேற்கூறிய திட்டங்களுக்கு அளித்த நிதி உதவியை முழுமையாகப் பயன்படுத்தியதோடு, மக்களும், விவசாயிகளும் பயன்பெறுகிற அளவில் பல செயல் நடவடிக்கைகளை மேற்கொண்டதற்கு தமிழ்நாட்டின் மாநில நிலப் பயன்பாட்டு வாரியத்தை இந்தியாவிலேயே முதன்மை வாரியமாக பாராட்டி, 2008ஆம் ஆண்டிற்கான நிதி உதவியாக9 ரூ. 75 இலட்சம் அளித்துள்ளது.

சென்னை நகரின் குடிநீர் தேவை, வாழிடத் தூய்மை, வரும் 10 ஆண்டுகளில் மிகப் பெரும் அளவில் பெருகும். குறிப்பாக சென்னை பெருநகரில், 2015இல் ஏறக்குறைய ஒரு கோடி மக்கள் வாழும் நிலை உள்ளது. எனவே, குடிநீர் தேவையும் பன் மடங்காக பெருகும். பிரேசில், பொலிவியா ஆகிய நாடுகளிலும், இந்தியாவில் சென்னை நகரிலும் குடிநீர் பிரச்சினை தொடர்பாக உலக நிதி நிறுவனத்தின் உதவியுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சென்னை நகருக்கான குடிநீர் பிரச்சினை ஆய்வினை, சென்னை வளர்ச்சி ஆய்வு நிறுவனம் (ஆஜனுளு) மேற்குறிப்பிட்ட நாடுகளில் கடைபிடித்த அணுகு முறையை அடிப்படையாகக் கொண்டு முனைவர் எஸ்.ஜனகராஜன் மேற்கொண்டுள்ளார். இவரின் ஆய்வு முடிவுப்படி காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் 3000க்கும் மேற்பட்ட குளங்கள், நீர்ப்பிடிப்பு பகுதிகள் உள்ளன என்று கண்டுபிடித்துள்ளார். இந்த நீர் ஆதாரங்களில் மழைநீரை முழுமையாக சேமித்தால் சென்னை குடிநீர் பிரச்சினையை தீர்க்கலாம் என்று உணர்ந்து தேவையை நிறைவு செய்து கூறுகிறார்.

பொதுப்பணித்துறை, குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவற்றின் முன்னிலையில் தனது ஆய்வு முடிவுகளைப் புள்ளி விவரங்களுடன் காண்பித்தார். மாநிலத் திட்டக்குழு இந்த கருத்துகளை ஆய்வு செய்து மாநில அரசிற்கு சில பரிந்துரைகளை அளிப்பது என்று இக்கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

**வருகை தந்தோர்**

| | |
|---|---|
| 1) | திரு தமிழருவி மணியன்,<br>பகுதி நேர உறுப்பினர், மாநிலத் திட்டக்குழு<br>சென்னை 600 005. |
| 2) | முனைவர் ஆர்.சீனிவாசன்,<br>பகுதி நேர உறுப்பினர், மாநிலத் திட்டக்குழு<br>சென்னை 600 005. |
| 3) | முனைவர் எம்.ராமலிங்கம்,<br>அண்ணா பல்கலைக்கழகம்.<br>சென்னை. |
| 4) | சி.ஜே.கந்தசாமி,<br>தலைமைப்பொறியாளர் – இயக்கநர்,<br>தண்ணீர் ஆய்வுகளுக்கான நிறுவனம்,<br>பொதுப்பணித்துறை. |

| | |
|---|---|
| 5) | **முனைவர் என்.வரதராசன்,**<br>**வட்டார இயக்குநர்,**<br>**மைய நிலத்தடி நீர் வாரியம்.** |
| 6) | **திரு சுனில்பாலிவால், இ.ஆ.ப.,**<br>**மேலாண்மை இயக்குநர்,**<br>**தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம்.** |

**பொதுப் பணித்துறை, குடிநீர் வடிகால் வாரியம், மாநிலத் திட்டக்குழு அலுவலர்கள் பங்கேற்றனர்.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**